1992 ஏப்ரல் 23]

இயங்கிக் கொண்டிருக்கிறது. நிதி நிலை நெருக்கடி ஒரு புறத்தில், பஞ்சினுடைய விலை உயர்ந்தது ஒரு புறத்தில் இத் தகைய சூழ்நிலையில் இருக்கிற நூற்பாலைகள் நடத்துவதே மிக மிக கஷ்டமாக இருக்கிறது. இதிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்பதற்காகத்தான் தாய் உள்ளத்தின் தலைவியாக இருக்கிற புரட்சித் தலைவி அவர்கள் பல்வேறு கோணங்களில் இதற்காக நிதி உதவி செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே தற்போது அதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 599, டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை. இருக்கையில் இல்லை.

வினா எண் 600 திரு. மு. நடேசன், திரு. கே. கந்தசாமி மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

600—

சேலம் பாதாளச் சாக்கடைத் திட்டம்.

*1355. திரு. மு. நடேசன்,
திரு. கே. கந்தசாமி.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

சேலம் பாதாளச் சாக்கடைத் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் நகராட்சிக்குச் சொந்தமான பனமரத்துப்பட்டி ஏரியில் கழிவுநீர் சுத்திகரிப்பு பண்ணையை அமைக்க உயர் நீதிமன்றம் இடைக்கால உத்திரவு அளித்துள்ளதால் மாற்று ஏற்பாடாக கான்பூரில் புதிதாக செயல்படுத்தப்பட்டுள்ள. (Unacrobic Sludde Blanket) முறையில் சேலம் கழிவுநீர் திட்டத்தில் செயல்படுத்த சாத்தியக் கூறுகள் ஆராயப்பட்டு வருகிறது.

திரு. மு. நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 20 வருடங்களாக சேலம் பாதாள சாக்கடைத் திட்டம் இதோ முடிந்துவிட்டது, அதோ முடிந்து விட்டது என்ற நிலைமையிலே இன்றைய சேலம் நகரத்திலே ஏறக்குறைய 6 லட்சம் மக்கள் வாழ்கிற நிலைமை இருக்கிறது, மிக வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிற ஒரு நகரமாக

இருந்து கொண்டிருக்கிறது. இந்த நகர மக்களுக்கு இந்த பாதாளச் சாக்கடைத் திட்டம் இல்லையென்று சொன்னால் பல சிரமங்கள் ஏற்படக்கூடிய ஒரு சூழ்நிலையிலே இன்றைய தினம் இந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிற நம்முடைய புனிதத் தாயினுடைய இந்த ஆட்சியிலே தயவு செய்து இந்த ஆண்டே அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்வதோடு- இந்த ஆண்டு நம்முடைய புனித தாயினுடைய ஆட்சியிலே எங்களுடைய சேலம் நகரத்தை மாநகராட்சியாக ஆக்கிய நம்முடைய காவல் தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இந்தத் திட்டத்தை இந்த ஆண்டே நம்முடைய அரசு ஏற்படுத்தித் தருமா என்பதையும் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு மாண்புமிகு உறுப்பினர் அர்ச்சுனன் அவர்கள் இந்தக் கேள்வியை முதலிலே கேட்டிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான இடத்தை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்வு செய்து கொடுப்பார்களேயானால் விரைவில் இந்த ஆண்டே அந்தத் திட்டத்தைத் துவக்கி நிறைவேற்றுவதற்கு வழிவகை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டத்தை அமைப்பதற்காக முன்னாள் முதலமைச்சர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் 1982 ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள். இந்த சாக்கடைத் திட்டத்தில் கழிவு நீரை பனைமரத்துப் பட்டியில் கொண்டு போய் சேர்ப்பதற்கு அரசுக்கு நீதிமன்றம் தடை ஆணை விதித்ததை அடுத்து அரசு வீரபாண்டி தொகுதியில் அதற்குரிய இடத்தை பார்த்திருக்கிறது, அண்மையிலே சேலம் மாவட்ட ஆட்சித் தலைவரும் மாண்புமிகு வீரபாண்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் அந்த இடத்தை பார்வையிட்டிருக்கிறார்கள். எனவே இந்த ஆண்டே அந்த பாதாள சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு ; இந்த ஆண்டே அந்தத் திட்டத்தைச் செயலபடுத்துவதற்கான எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 601. திரு. வே. தம்புசாமி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.